ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2005 - 2017 පෙබරවාරි මස 03 වැනි සිකුරාදා - 2017.02.03
2005 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 150 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 160 |

**கவனிக்க.-** களனி அசோகாராம சிலுமினி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, சனவரி மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிரந்தர வான்படை

*பயிலிளவல் ஆண்/ பெண் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள்*

*இலங்கை நிரந்தர வான்படையில் கீழ்வரும் பிரிவுகளில் பயிலிளவல் ஆண்/ பெண் அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன :-*

(அ) பொதுக்கடமை விமான ஓட்டுநர் பிரிவு (ஆண்/ பெண்) ;
(ஆ) தொழில்நுட்ப பொறியியல் பிரிவு (ஆண்) ;
(இ) இலத்திரனியல் பொறியியல் பிரிவு (ஆண்)
(ஈ) உபகரணப் பிரிவு (ஆண்/ பெண்) ;
(உ) நிருவாக பிரிவு (ஆண்/ பெண்) ;
(ஊ) நிருவாக ரெஜிமன்ட் பிரிவு (ஆண்) ;
(எ) வான் வழி நடத்துநர் பிரிவு வான் வழி கட்டுப்பாடு (ஆண்).

*2. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண்/ பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-*

(அ) BSc. (Aviation Studies) **பட்டப் பயிற்சிக்கு உட்செல்வதற்கான தகைமை (ஜெனரல் சேர். ஜோன் கொத்தலா வலை பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட)**
**பொதுக்கடமை விமான ஓட்டுநர்/ வான் வழி நடத்துநர் பிரிவுகள் (வான் வழிக் கட்டுப்பாடு) :**

*குறைந்தபட்சம் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/ தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதிக (பௌதிகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம்)/ உயிரியல் (பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல்) பிரிவுகளில் (தேவையைப் பொறுத்து) மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.*

*தொழில்நுட்ப பொறியியல் பிரிவு/ இலத்திரனியல் பொறியியல் பிரிவு :*

*குறைந்த பட்சம் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்திகள் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/ தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதிக பிரிவில் (பௌதிகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம்) (தேவையைப் பொறுத்து) மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.*

*உபகரணப் பிரிவு/ நிருவாகப் பிரிவு/ நிருவாக ரெஜிமன்ட் பிரிவுகள் :*

*குறைந்தபட்சம் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/ தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதிக/ உயிரியல்/ வர்த்தக/ தொழில்நுட்பப் பிரிவுகளில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மேலும் கலைப்பிரிவு மாணவர்கள் குறைந்தபட்சம் க. பொ. த. (உ. த.) மூன்று பாடங்கள் சித்திபெற்றிருப்பின் நிருவாக ரெஜிமன்ட் பிரிவிற்கு விண்ணப்பிக்கலாம்.*

*3.* **வேறு தகைமைகள்.-** இவற்றுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளைக் கட்டாயமாக பூர்த்திசெய்தல் வேண்டும் :-

(அ) தேசிய இனம் :- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது :- 2017, மே 20 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) உயரம் :- ஆண்- 5 அடி 6 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும் ; பெண்-5 அடி 4 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும்.

(ஈ) உடல் நிறை :- ஆண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 26
பெண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 25

உடற்பருமன் சுட்டி (BMI) = $\frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம் (மீ)}^2}$

(உ) மார்பு :- ஆண் 32" (குறைந்தது)

(ஊ) பார்வை வர்ணப்பதிவு மட்டம் :- CP2

(எ) தொலை பார்வை :- இரண்டு கண்களிலும் 6/ 6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(ஏ) குடியியல் நிலை :- விண்ணப்பதாரர்கள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலிளவல் எவரும் பயிற்சியின் போதும் ஆணைபெற்ற திகதியிலிருந்து ஓராண்டு காலத்துக்கும் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள சாதனைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. இரண்டாம் மூன்றாம் பந்தியின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வைமட்டம் ஆகியவற்றிற்கு குறைவானவர்களும் உடற்தகைமை மட்டத்தை கொண்டிராதவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். தேவையான உயரம் இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

6. **சேவை நிபந்தனைகள்.**- (அ) தேர்வுநாடி தொடக்கத்தில் ஏனைய பதவி வரிசைகளுக்குப் போன்ற அதே விதத்தில் வான்படையில் ஒரு பயிலிளவலாகச் சேர்க்கப்பட்டு அடிப்படை யுத்தப் பயிற்சியொன்றை மேற்கொள்வர். அடிப்படை பயிற்சி திருப்திகரமாக முடிவடைந்ததும் மற்றைய பயிற்சிக்கான காலப்பகுதி பயிலிளவல் சேவையின் கிளையைப் பொறுத்து இருக்கும். பின் ஏனைய பதவி வரிசையிலான ஆட்சேர்ப்பு நீக்கப்பட்டு பைலட் ஒபிசர் பதவி வரிசையில் நிரந்தர ஆணையொன்றை பெறுவர்.

(ஆ) பயிலிளவல் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் வான்படை ஏவுநரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுவர்.

(இ) பயிலிளவல்களாகப் பயிற்சி பெறும் காலப்பகுதியின் போதும் அதன் பின்னரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

(ஈ) ஒவ்வொரு பயிலிளவலுக்கும் அனைத்து வகை சீருடைகள், உபகரணங்கள், மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

(உ) பயிலிளவலின் பயிற்சிக் காலத்தின்போது பயிலிளவலுக்கு வான்படை உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப்பட்டு உணவும் வழங்கப்படும்.

(ஊ) ஒரு பயிலிளவல் பயிற்சியின்போது ஆணையொன்றைப் பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளுமிடத்து அத்தகைய பயிலிளவலின் பொருட்டு அதுகாலவரையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

(எ) ஒரு பயிலிளவல் தமது பயிற்சியின்போது எச்சமயத்திலும் பிறழ்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஏதுக்களுக்காக ஆணை பெறுவதற்கான தகைமைக்குப் பொருத்தமற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை இடப்படுமிடத்து அவர் பயிற்சியில் இலங்கைக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவரென்பதுடன் இதற்காக இலங்கை அரசின் சார்பில் வான்படை ஏவுநருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும்படியும் தேவைப்படுத்தப்படுவர்.

(ஏ) பெற்றோர் அல்லது பாதுகாவலர் உப்பந்திகள் ஊ, எ தொடர்பாக விண்ணப்பப்படிவத்தின் 27 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். இத்தேர்வுநாடிகள் பயிலிளவல்களாக நியமிக்கப்படுவதற்கு முன்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்தப் படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(ஐ) பந்தி 2 இலும் 3 இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வுநாடிகள் முதலாவது நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டுவதுடன் இதில் சித்தி பெறுபவர்கள் அலுவலர் தரப் பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். அலுவலர் தரப்பரீட்சையில் சித்தி பெறும் தேர்வுநாடிகள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதுடன், (எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கை வான்படையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச் சபைக்கு உட்படுத்தப்படுவர்.) தேவைப்படின் விமானத்தில் செல்லும் திறமையும் பரீட்சிக்கப்படும். ஒவ்வொரு கிளைகளுக்கும் தேவைப்படும் தேர்வுநாடிகளின் எண்ணிக்கை அவரவர்கள் இந்த நேர்முகப் பரீட்சைகளிலும் தேர்வுகளிலும் காண்பித்த திறமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

(ஒ) திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

(ஓ) திருமணமாகிய அலுவலராயின் (கிடைக்குமாயின்) மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று வாடகை அறவிடப்படும்.

(ஔ) எல்லா அலுவலரும் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப் படுவதற்கு ஆளாவர்.

(அஅ) எல்லா அலுவலரும் வான் படைச் சட்டத்தினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் ஆளப்படுவர்.

7. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்**.- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொழிக் கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

8. **சம்பளமும் கொடுப்பனவுகளும்**.- (அ) இலங்கை வான் படையில் பயிலுனர்களுக்கும் ஆணைபெற்ற அலுவலர்களுக்கு மான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) -

| வருடம் / நிலை | 2017 (ஆண்டொன்றுக்கு) | சீராக்கப்பட்ட 2017 (ஆண்டொன்றுக்கு) | 2020 (ஆண்டொன்றுக்கு) |
|---|---|---|---|
| பயிலிளவல் | 267,996.00 | 77,148.00 | 388,560.00 |
| பைலட் ஆபீசர் (பயிலிளவல் நுழைவு) | 319,404.00 | 68,796.00 | 463,260.00 |
| பைலட் ஆபீசர் (பயிலிளவல் அல்லாத நுழைவு) | 346,764.00 | 64,476.00 | 502,860.00 |
| பிளையிங் ஆபீசர் | 393,684.00 | 56,580.00 | 571,380.00 - (30 X 16,020) = 1,051,980.00 |
| ப்ளையிட் லெப்டினன்ட் | 459,996.00 | 45,996.00 | 667,500.00 - (24X 16,020) = 1,051,980.00 |
| ஸ்குவாட்ரன் லீடர் | 504,204.00 | 38,940.00 | 731,580.00 - (22 X 16,020) = 1,084,020.00 |

(ஆ) **ஏனைய கொடுப்பனவுகள்**.-

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 7,800 ரூபா.

(2) உற்சாகமூட்டும் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் 250 வீதம் வழங்கப்படும்.

(3) கடினப்படி : மாதமொன்றுக்கு 620 ரூபா.

(4) விசேட கொடுப்பனவு : யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு 4,380 ரூபா.

(5) விசேட கொடுப்பனவு 3,100 ரூபா (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் 100 ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படும்.)

(6) இடைக்காலக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு 1,000 ரூபா.

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு 255 ரூபா).

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு 16,676.14 ரூபா (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை).

(11) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும் துணைவிக்கும் பிள்ளைகளுக்கும்)

(12) உணவு விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு.

(13) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்.

(14) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத்தினருக்கும்).

(15) திருமணமான அலுவலருக்கு மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(16) பொதுக்கடமை விமான ஓட்டுநர் கிளையில் உள்ளவர்களுக்கு பறத்தல் சம்பளம் வழங்கப்படும்.

(17) பொறியியல் அதிகாரிகளுக்கான கொடுப்பனவு ( பொறியியல் அதிகாரிகளுக்கு மாத்திரம்)

(18) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் பைலற் ஆபீசர் இல் இருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,600 இலிருந்து 4,250 ரூபா வரை வாடகைப்படிகள் கொடுபடற்பாலனவாகும்.

9. **ஓய்வூதியங்கள்/ பணிக்கொடைகள்.**- காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய அத்துடன் பணிக்கொடைகள் கோவையின் நியதிகளின்படி கொடுபடற்பாலனவாகும். எல்லா அலுவலர்களும் விதவைகள், அநாதைகள் (ஆயுதந் தாங்கிய படைகள்) ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துபவராவர். உதவுதொகை 1970 ஆம் ஆண்டின் விதவை, அநாதைகள் (ஆயுதந் தாங்கிய படைகள்) ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளபடியானவாகும்.

10. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்.**- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரிப்படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2017, பெப்புருவரி 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் “கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி, கட்டளை ஆட்சேர்ப்பு அலுவலகம், தொழிற்துறை பயிற்சிப் பாடசாலை, இலங்கை விமானப்படை, ஏக்கல, கொட்டுகொட” என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “பயிலிளவியல் ஆண்/பெண் அலுவலர்களுக்கான விண்ணப்பம்- ............................ பிரிவு” எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் தேதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில்/ குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/ சபையின்/ குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) தேர்வுநாடி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது அல்லது அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது பின்வருவனவற்றின் மூலப்பிரதிகளை காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் (கல்விச் சட்டக்கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள் ளப்படமாட்டா) ;

(2) விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்/ தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன்/ அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனுமிருப்பின்) ;

(4) இரு குணநலச் சான்றிதழ்கள். இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்வி கற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பதாரரை அறிந்துள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில் தருநரினதாக இருத்தல் வேண்டும் ;

(5) விளையாட்டுத்துறைகள், பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும்போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கெடுக்கப்படமாட்டா.

(உ) ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

11. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவிநீக்கத்திற்கும் விண்ணப்பதாரரை ஆளாக்கிவிடும்.

12. **தேர்ந்தெடுத்தல், நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேற் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் தேர்வுநாடிகளிலிருந்து பூர்வாங்கத் தெரிவுகள் செய்யப்படும். ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்படும் தேர்வுநாடிகள் வான்படை ஏவுநரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சோதனைகளுக்கு உட்படுத்தப்படும்படி தேவைப்படுத்தப்படுவார்கள். இதன் பின்னர் தெரிவுச் சபை ஒன்றினாலான நேர்முகப் பரீட்சையின் பின்னர் இறுதித் தெரிவு நடைபெறும்.

(ஆ) நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவுசெய்யப்படும் தேர்வுநாடிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டா.

(இ) விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

(ஈ) நேர்முகப் பரீட்சைகளைத் தொடர்ந்து பொருத்தமாகக்கூடியவாறான தேர்வுநாடிகள் வான்படை மருத்துவச் சபைக்கு சமுகமளிக்கும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபாரிசு செய்ய விரும்புவதாயின் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) சேர்த்துக்கொள்வதற்குப் பொருத்தமற்றவராகக் காணப்படும் தேர்வுநாடிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டா.

கே. வீ. பி. ஜயம்பதி,
எயர் மார்ஷல்,
வான் படைத் தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான் படை,
த. பெ. இல. 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர வான்படையில் ........................... பிரிவில் ஆண்/பெண் பயிலிளவல் அலுவலருக்கான விண்ணப்பம்**

1. தேசிய இனம் :----.

(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா ? பதிவுமுறையாயின், சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

2. முழுப்பெயர் (தேசிய ஆள் ஆளடையாள அட்டையிலுள்ளபடி) : ----.

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. நிரந்தர முகவரி :----.

5. தற்போதைய அஞ்சல் முகவரி :----.

6. பிறந்த திகதி :----.

வயது (2017, மே 20 ஆந் திகதியன்று) :-

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

7. உயரம் : ---- அடி, ---- அங்குலம்.

8. நிரந்தர முகவரிக்கு அண்மையிலுள்ள பொலிசு நிலையம் :----.

9. மாவட்டம் :----.

10. தேர்தற் தொகுதி :----.

11. கிராம அலுவலர் பிரிவு :----.

12. தொலைபேசி இலக்கம் :----.

13. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

14. பால் :----.

15. பாடசாலை பற்றிய விபரங்கள் :----.

16. பாடசாலை அத்துடன்/ அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :----.

| பாடசாலை/ பல்கலைக் கழகத்தின் பெயர்கள் | பரீட்சையின் தன்மை | ஆண்டு | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>வேறு | | |

17. பாடசாலை/ பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

18. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| | முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|---|
| தந்தை | | | | |
| தாய் | | | | |

19. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

20. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----.
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

21. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

22. இதற்கு முன் ஆயுதப் படையில், தொண்டர் படையில், பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

23. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதன் பொருட்டு முன்பு விண்ணப்பித்துள்ளீரா ? அவ்வாறாயின், விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

24. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளீரா ? அல்லது பிணையில் விடப்பட்டுள்ளீரா ? அப்படியாயின், விபரங்கள் தருக :----.

25. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

26. நற்சான்றிதழ்கள் வழங்கியோர் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

27. **விண்ணப்பதாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத்துகை-**

மேலே என்னால் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படைக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறைகளையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

28. **விண்ணப்பதாரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடவேண்டிய வெளிப்படுத்துகை :**

(அ) இலங்கை வான்படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 27 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் ........................................ என்பவருக்கு நான், பெற்றோர்/ பாதுகாவலர் ஆவேன்.

(ஆ) மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொறுப்பாளியாவேன் :-

(1) பயிற்சியின்போது ஆணைக்கான அவரது தேர்வு நாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்து இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு திருப்பிக் கொடுப்பதற்கும்,

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாட்டுக் காரணங்களுக்காக ஆணை வழங்கப்படுவதற்குத் தகுதியற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு திருப்பிச் செலுத்துவதற்கும் உடன்படுகிறேன்.

----,
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

----,
முதலாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

----,
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

2-191

---

## தேசிய கல்வி ஆணைக்குழு

### தேசிய கல்வி ஆணைக்குழுவில் வெற்றிடமாகியுள்ள நிர்வாக அலுவலர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு

தேசிய கல்வி ஆணைக்குழுவில் தற்போது வெற்றிடமாகியுள்ள நிர்வாக அலுவலர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பொதுத் தகைமைகள் :**

(i) சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;

(ii) நீதிமன்றத்தினால் குற்றம்சாட்டப்பட்டு தண்டனை பெற்றவராக இருத்தலாகாது ;

(iii) விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் திகதியில் 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அரச அல்லது அரச சார்பான நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வயதெல்லை கிடையாது) ;

(iv) பதவிக்குச் சாட்டப்படும் பணிகளை உரிய முறையில் பூர்த்திசெய்வதற்கும் நாடு முழுவதிலுமுள்ள எந்தப் பிரதேசத்திலும் வேலை செய்வதற்கும் அவசியமான உள மற்றும் உடல் நலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நிபந்தனைகள்.-** இந்தப் பதவி நிரந்தரமானது. நியமனம் வழங்கப்பட்ட திகதியில் இருந்து மூன்று வருட காலம் தகுதிகாண் காலமாகும். ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கு உரித்துடையவர். அரசினால் அமுல்படுத்தப்பட்ட மற்றும் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் பொதுச் சட்டங்கள், நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கும் உட்படும். சேவையின் தேவைக்கு அமைவாக உரிய முறையின்கீழ் தகைமையுடையவர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

3. **பதவிக்கு உரிய தகவல்கள்** :

| | |
|---|---|
| 1. பதவியின் பெயர் | நிர்வாக அலுவலர் - (தரம் - II) |
| 1.1 சம்பள அளவு | JM-1-1-2016 (ரூ. 42,600 - 10 x 755 - 18 x 1,135 - ரூபா 70,580) |
| 1.2 தகைமை | (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம், கணக்கியல் அல்லது அதற்குச் சமமான துறையில் பட்டத்தைப் பெற்றிருத்தல் ;<br>(ii) உரிய துறையில் 3 வருட அனுபவம் (நிறுவன நடவடிக்கைகள் மற்றும் நிதி நடவடிக்கைகள்)<br>மற்றும்<br>(iii) கணினி மென்பொருள் பாவனை (விசேடமாக நிதி நடவடிக்கைகள் தொடர்பாக) தொடர்பாக உள்ள திறன் விசேட தகைமையாகும்.<br>(iv) இரண்டாம் மொழியில் பணிபுரியக்கூடிய திறன்<br>(v) தாபனக்கோவை, நிதிப்பிரமாணம் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் தொடர்பாக அதிகூடிய அறிவு இருத்தல் மேலதிக தகைமையாகும். |
| 2. பதவியின் பெயர் | முகாமைத்துவ உதவியாளர் - (தரம் - III) |
| 2.1 சம்பள அளவு | MA-1-1-2016 (ரூ. 27,910 - 10 x 300 - 7 x 350 - 4 x 495 - 20 x 660 - ரூபா 48,540) |
| 2.2 தகைமை | (i) சிங்கள அல்லது தமிழ் மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொது தராதரப் பத்திரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் ;<br>(ii) கல்விப் பொதுத் தராதர (உயர்தரம்) பரீட்சையில் (பொதுப் பரீட்சை தவிர்ந்த) மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் ;<br>(iii) கணினிப் பாவனை தொடர்பாக ஒரு வருட டிப்ளோமா பாடநெறியை அரசினால் அல்லது தொழில்நுட்ப மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழு என்பவற்றினால் அங்கீகரித்த நிறுவனத்தில் பெற்றிருத்தல்.<br>விசேட தகைமை :<br>(i) கணக்கியல் தொடர்பான ஒரு வருடத்திற்குக் குறைவான பாடநெறியை அரசு அங்கீகரித்த நிறுவனத்தில் பயின்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும் (கணக்குப் பிரிவிற்கு). |

விண்ணப்பத்தை கீழக்குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக தயார்செய்து 2017.02.17 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் "தவிசாளர், தேசிய கல்வி ஆணைக்குழு, இலக்கம் 126, நாவல வீதி, நுகேகொடை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் பதவியைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற விண்ணப்பங்கள் அல்லது விண்ணப்பத் திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தற்போது அரச/அரச நியதிச்சட்ட (Semi Government) சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் எனின் விண்ணப்பத்தை நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

இந்த அறிவித்தலுக்கு அமைவாக வெற்றிடத்தைப் பூர்த்திசெய்தல், பூர்த்திசெய்யாது விடுதல் அல்லது ஓர் பகுதியை மட்டும் பூர்த்தி செய்வதற்கான முழுமையான அதிகாரம் தேசிய கல்வி ஆணைக்குழுவிடம் உள்ளது.

எதிர்பார்க்கப்படும் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகள் மட்டும் ஆட்சேர்ப்பு முறைமைக்கு ஏற்ப கவனத்தில் கொள்ளப்படுவர்.

* **கவனத்தில் கொள்ள வேண்டியது**.- நிறுவனம் தற்போது இலக்கம் 126, நாவல வீதி, நுகேகொடை எனும் முகவரியில் உள்ளதுடன், இதற்குக் கிளை அலுவலகங்கள் கிடையாது.

**குறிப்பு**.- இந்த வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ்வர்த்தமானி அறிவித்தல் பற்றிய சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்க,
தவிசாளர்,
தேசிய கல்வி ஆணைக்குழு.

தேசிய கல்வி ஆணைக்குழு,
இலக்கம் 126, நாவல வீதி,
நுகேகொடை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய கல்வி ஆணைக்குழு**

...................................... பதவிக்கான விண்ணப்பப்படிவம்

1. 1.1 விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.

 1.2 முதல் எழுத்துடன் பெயர் :----.

2. நிரந்தர முகவரி :----.

3. தொலைபேசி இலக்கம் :----.

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

5. 5.1 பிறந்த திகதி :

 ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

 5.2 விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது :

 வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

6. பால் :

 ஆண்/பெண் :----.

7. இலங்கைப் பிரசையாக இருப்பது பிறப்பின் மூலமா அல்லது பதிவுசெய்ததன் மூலமா ? :----.

8. கல்வித் தகைமை :

 8.1 பட்டதாரி எனின், (பொருத்தமாயின்)

 பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பல்கலைக்கழகம் :----.

 பட்டத்தை பெற்றுக்கொண்ட வருடம் மற்றும் மொழி :-----.

 பட்டத்திற்குரிய பாடங்கள் :----.

 வெளிவாரிப் பட்டதாரி/உள்வாரிப் பட்டதாரி என்பது பற்றி :----.

 8.2 க. பொ. த. (உ. த.) பெறுபேறு :

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |

8.3 க. பொ. த. (சா. த.) பெறுபேறு :

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

9. ஏனைய தகைமைகள் :----.

10. தொழில் தகைமைகள் :----.

11. சேவை அனுபவம் :----.

12. இங்கே குறிப்பிடப்பட்ட அனைத்துத் தகவல்களும் எனது அறிவுக்கெட்டியவரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என வெளிப்படுத்துகின்றேன். ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு அமைவாக பொய்யான தகவல்களை வழங்கியதாக ஆட்சேர்ப்புக்கு முன்னர் அல்லது ஆட்சேர்ப்புக்குப் பின்னர் தெரியவருமாயின் எவ்வித இழப்பீடுமின்றி சேவையில் இருந்து நீக்குவது உட்பட தண்டனைக்கு உட்படுவேன் என்பது எனக்குத் தெரியும்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

13. தற்போது சேவையில் இருப்பவர் எனில், விண்ணப்பதாரி தொடர்பாக நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :
திரு./திருமதி/செல்வி ......................................... அவர்கள் தற்போது எங்கள் நிறுவனத்தில் ......................................... ஆக சேவை புரிகின்றார். அவரால் மேலே குறிப்பிட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் இந்த நிறுவனத்தின் சேவையில் இருந்து விடுவிக்க முடியும்./முடியாது. அவர் எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படவில்லை. இந்த விண்ணப்பத்தை விதப்புரை செய்து/செய்யாது சமர்ப்பிக்கின்றேன்.

----,
கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி :----.

2-123

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

இலங்கை கால்நடை பரிபாலன பாடசாலை நுழைவிற்கான போட்டிப் பரீட்சை - 2017

***2017/2019 ஆம் கல்வி ஆண்டின் பொருட்டு கால்நடை வளர்ப்பில் இரண்டு வருட டிப்ளோமா பாடநெறி***

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் ஊடாக நடாத்தப்படுகின்ற இரண்டு வருட கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பாடநெறி - 2017/2019 ஆம் கல்வி ஆண்டின் பொருட்டு கரந்தகொல்லை மற்றும் சீப்புக்குளம் இலங்கை கால்நடை பராமரிப்பு பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் 2017, மாச்சு மாதம் கண்டியில் நடத்தப்படும். அதன் பொருட்டு விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**2. டிப்ளோமா பாடநெறி தொடர்பிலான விபரங்கள் வருமாறு :-**

2.1 இப்பாடநெறி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழி களிலும் நடாத்தப்படும்.

2.2 இந்த டிப்ளோமா பாடநெறியானது ஒரு தொழிற் பயிற்சி வேலைத்திட்டமாக அமைவதுடன், (அரசாங்கத்தில் தொழில் பெற்றுக்கொள்வதற்கு இத்தொழிற் தகைமைக்கு மேலதிகமாக அப்பதவிக்கு உரிய ஆட்சேர்ப்புச் செயன்முறையில் குறிப்பிடப் பட்டுள்ள ஏனைய தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்).

2.3 பயிற்சிக் காலத்தின்போது மாணவர்களுக்கு நாளாந்தம் தங்குவதற்கான கொடுப்பனவு வழங்கப்படும். அதேவேளை மேலதிகமாக ஏற்படுகின்ற செலவினை மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

2.4 சனி, ஞாயிறு போன்ற தினங்களிலும் வகுப்புக்கள் நடைபெறுவதால் விடுதிகளில் இருந்து மாணவர்களை அனுப்புவது மாதத்திற்கு ஒரு வார இறுதி நாளில் மாத்திரமாகும்.

**3. ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள் :-**

3.1 (அ) சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் போன்ற பாடங்கள் மூன்றில் திறமைச் சித்தியும், மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் (இதற்கு அமைய நான்கு

திறமைச் சித்திகள் இருத்தல் வேண்டும்.) இரு தடவைகளுக்கு மேற்படாத வகையில் 6 பாடங்களுடன் க. பொ. த. (சா. த.) ப் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். இங்கு ஒரே தடவையில் மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆகக்குறைந்தது 5 பாடங்களிலாவது சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

மற்றும்

க. பொ. த. (உ. த.) ப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பாடங்களை மேற்கொண்டு இரசாயனவியல், பௌதீக விஞ்ஞானம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (இத்தகைமைகளைக் கொண்டுள்ள மாணவர்களுக்கு தெரிவுசெய் கையில் முன்னுரிமை வழங்கப்படும்)

அல்லது

(ஆ) சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் போன்ற பாடங்கள் மூன்றில் திறமைச் சித்தியும், மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் (இதற்கு அமைய நான்கு திறமைச் சித்திகள் இருத்தல் வேண்டும்) இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆறு பாடங்களுடன் க. பொ. த. (சா. த.) ப் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். இங்கு ஒரே தடவையில் மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆகக்குறைந்தது ஒரே தடவையில் 5 பாடங்களிலாவது சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

மற்றும்

க. பொ. த. (உ. த.) ப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பாடங்களை மேற்கொண்டு இரசாயனவியல், பௌதிக விஞ்ஞானம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். இத்தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படுவது 3.1 (அ) இல் விண்ணப்பகாரர் சகலரும் தெரிவுசெய்ததன் பின்னர் வெற்றிடம் இருந்தால் மாத்திரம் ஆகும்.

(இ) ஆங்கில மொழியில் இக்கற்கை நெறியினைத் தொடர விரும்பும் விண்ணப்பகாரர், க. பொ. த. (சா. த.) ப் பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க. பொ. த. (உ. த.) ப் பரீட்சையில் பொது ஆங்கில பாடத்தில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

3.2 விண்ணப்பக்காரர் 2017, பெப்புருவரி 28 ஆந் திகதியன்று 17 வயதிற்கு குறையாமலும் 25 வயதினை விஞ்சாமலும் இருத்தல் வேண்டும்.

3.3 தேவையான கல்வித் தகைமைகளைக் கொண்டிராத மற்றும்/ அல்லது உரிய வயதெல்லையை மீறும் விண்ணப்பகாரரது விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படும்.

3.4 பெறுபேற்றினை எதிர்பார்த்து இருப்போர் விண்ணப்பிக்க வேண்டாம். அரச திணைக்களம் ஒன்றில் அல்லது நிறுவனம் ஒன்றில் இருவருட கால்நடை வளர்ப்பு பாடநெறியினைப் பின்பற்றும் மாணவர்கள் இப்பாடநெறியைப் பின்பற்றுவதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவராவர்.

**4. விண்ணப்பங்கள் :**

4.1 இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பக்காரரினால் ஏ4 அளவிலான கடதாசியில் விண்ணப்பம் தயாரிக்க வேண்டும். முறையாகப் பூரணத்துவமாகாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

4.2 பரீட்சைக் கட்டணம் ரூபா 150 ஆகும். விண்ணப்ப காரர் அத்தொகையினை "கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்" அவர்களது பேராதனை, 057100179027275 ஆம் இலக்க மக்கள் வங்கிக் கணக்கிற்கு வைப்பிலிட்டு பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும். உரிய கூட்டில் அதன் ஓரத்தை மாத்திரம் ஒட்டிவிடுதல் வேண்டும். மேலும் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சையின் பொருட்டு செலுத்தப்படும் கட்டணம் வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றம் செய்ய முடியாது. இப்பரீட்சையின் பொருட்டு வங்கிப் பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் அனுப்பிவைக்கப்படாத விண்ணப்பங்கள் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும்.

4.3 விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபாலில் மாத்திரம் 2017.02.28 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் (மனிதவள அபிவிருத்தி), கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம் 13, பேராதனை" எனும் முகவரிக்கு தபாலிலிடுதல் வேண்டும்.

4.4 விண்ணப்பம் உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2017/ 2019 ஆம் கல்வியாண்டின் பொருட்டு கால்நடை வளர்ப்பு

பாடசாலைக்கான நுழைவு" எனும் சொற்றொடர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

4.5 விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ்கள் மற்றும் பிறப்புச்சான்றிதழ் என்பவற்றின் நிழற்படப் பிரதிகள் இணைக்கப்பட்டு இருக்க வேண்டும். இவ்வாறு வினவப்பட்டிருக்கும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்காதவிடத்து விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

5. **தெரிவுசெய்யும் முறை :**

5.1 இத்திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற எழுத்துமூல மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

5.2 எழுத்துமூலப் பரீட்சை பின்வரும் இரண்டு வினாப் பத்திரங்களைக் கொண்டமைந்திருக்கும் :-

(i) கால்நடை வளர்ப்பு.- க. பொ. த. (சா. த.)ப் பரீட்சையின் விவசாயப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கால்நடை வளர்ப்பு தொடர்பான பகுதிகளில் இருந்து தயாரிக்கப்படும் பல்தேர்வு மற்றும் சிறு வினாக்களைக் கொண்டு அமைந்து இருக்கும். (நேரம் : 1 மணித்தியாலம்)

(ii) பொது அறிவு : (நேரம் : 1 மணித்தியாலம்)

5.3 எழுத்துமூலப் பரீட்சைக்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது அவ்விரண்டிற்கும் தோற்று வதன் பொருட்டு விண்ணப்பகாரருக்கு எவ்வித கொடுப்பனவும் அரசினால் வழங்கப்பட மாட்டாது.

5.4 பரீட்சை நடைபெறுகின்றபோது விண்ணப்பக்காரரால் தமது ஆளடையாளத்தை பரீட்சை மேற்பார்வை யாளருக்கு உறுதிப்படுத்துதல் வேண்டும். இதன் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை ;

(ii) ஏற்றுக்கொள்ளப்படும் கடவுச்சீட்டு.

5.5 விண்ணப்பக்காரர் எவராயினும் ஒருவர் போலி தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவரின் அவரது மாணவத் தன்மையை உடன் நிறுத்துவதற்கும், அவ்வாறே பயிற்சிப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குப் பின் பயிற்சியை விட்டு விலகும் மாணவர்கள் தொடர்பில் பயிற்சியின் பொருட்டு அரசினால் அதுவரையில் மேற்கொள்ளப்பட்ட சகல செலவுகளையும் மீள் செலுத்துவதற்கும் நீர் கட்டுப்பட்டுள்ளீர். செலவின் அளவைத் தீர்மானிக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும்.

6. சகல விண்ணப்பக்காரரும் தமது கையொப்பத்தினை அரசாங்கப் பாடசாலை அதிபரினால்/ ஓய்வுபெற்ற அதிபரினால்/ கிராம சேவையாளரினால்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளரினால்/ சட்டத்தரணி/ நொத்தாரிசு/ முப்படை அதிகார உத்தியோகத்தரால், 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேலான வருடாந்த வேதனம் பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் உள்ள அல்லது பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையின் பிரதம பிக்கு அல்லது ஏனைய மதஸ்தான பொறுப்பாளர் அல்லது மதக்குழுவினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவரினால் சான்றுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

7. இந்த வர்த்தமான அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஆகியவற்றிற்கு இடையே ஏதாவது பொருந்தாத் தன்மை அல்லது வேறுபாடு நிலவுமிடத்து சிங்கள மொழி மூல அறிவித்தலே செயல்வலுப் பெறும்.

டாக்டர் ஏ. சிவசோதி,
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் (பா).

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,
கெட்டம்பே,
பேராதனை.
2017, சனவரி 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்**

இலங்கை கால்நடை பராமரிப்புப் பாடசாலை

கால்நடை வளர்ப்பில் இரண்டு வருட
டிப்ளோமா பாடநெறி - 2017/ 2019

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி மூலம் : ☐

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (தெளிவான எழுத்தில்) :----.

2. முதல் எழுத்துக்களுடன் பெயர் :----.

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

4. முகவரி :----.

5. பிரதேச செயலாளர் பிரிவு :----.

மாவட்டம் :----.

6. பிறந்த திகதி :

ஆண்டு ---- மாதம் ---- திகதி ----

7. 2017.02.28 ஆந் திகதியன்று உள்ளவாறான வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

8. தொலைபேசி இலக்கம் :----.

9. விண்ணப்பகாரரது கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சை :

| பாடங்கள் | பெற்ற தரம் | வருடம் | சுட்டெண் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |
| 9. | | | |
| 10. | | | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை :

| பாடங்கள் | பெற்ற தரம் | வருடம் | சுட்டெண் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். பிரதிகள் இன்றி வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)

10. பணம் செலுத்திய தபால் அலுவலகத்தின் பெயர் மற்றும் பற்றுச்சீட்டின் இலக்கம் :----.

(பற்றுச்சீட்டைக் கழறாதவாறு இங்கே ஒட்டவும்.)

11. இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அல்லது நிறுவனம் :----.

12. பாடசாலையில்/ நிறுவனத்தில் இருந்து விலகிய திகதி :----.

13. கால்நடை வளர்ப்பில் ஏதாவது அனுபவம் பெற்று இருப்பின் அது தொடர்பான விபரம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்) :----.

14. கிராம அபிவிருத்தி/ விவசாயம்/ சமூக சேவை/ விளையாட்டு தொடர்பான அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்) :----.

15. உறவு முறையல்லாத இருவரது பெயர் முகவரி :

(1) .................................... (2) ....................................
.................................... ....................................
.................................... ....................................

எனது அறிவுக்கு எட்டியவரையில் மேலே என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை என்றும், உண்மையானவை என்றும், எனது வழமையான கையொப்பத்தை இட்டு இத்தால் உறுதிமொழிகின்றேன். எனது தெரிவின் பின்னர் இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது பிழையானது எனக் காணப்படுமிடத்து எனது மாணவர் நிலை முடிவுறுத்தப்படுவதுடன், பயிற்சி பெறும் காலத்தில் எனக்காக அரசாங்கத்திற்கு செலவுகள் ஏதும் ஏற்பட்டு இருப்பின் அத்தொகையை நான் செலுத்த வேண்டும் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரது கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின்/ ஆவணங்களின் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

1. ........................................................................................
2. ........................................................................................
3. ........................................................................................

**கையொப்பத்தை சான்றுப்படுத்தல்:**

இவ்விண்ணப்பத்தையுச் சமர்பபிக்கும் திரு./ திருமதி/ செல்வி ......... அவர்களை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிவேன் என்றும் அவர் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும், என் முன்னிலையில் .............. திகதியன்று கையொப்பமிட்டாரென்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

..............................
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

சான்றுப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர்:----.
பதவி : -----.
முகவரி :-----.

(தயவு செய்து செய்து உத்தியோகபூர்வ இலச்சினையை இடவும்).

2-23

## அரசாங்க தகவல் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் பிரிவு - 03 சேவை மட்டத்தின் (MN - 03 - 2016) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கட்டிட புனரமைப்பு மற்றும் பராமரிப்பு) பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017

அரசாங்க தகவல் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் பிரிவு - 03 சேவை மட்டத்தின் (MN - 03 - 2016) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கட்டிட புனரமைப்பு மற்றும் பராமரிப்பு) 01 பதவிக்காக திறந்த முறையின்கீழ் தெரிவுசெய்வதற்காகப் பின்வரும் தகைமைகளைக் கொண்ட ஆண்/ பெண் விண்ணப்பதாரிகளிடத்தில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய தகைமை அடிப்படையில் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரி தொழில்நுட்ப உதவியாளர் (கட்டிட புனரமைப்பு மற்றும் பராமரிப்பு) பதவிக்குத் தெரிவுசெய்யப்பட உள்ளனர்.

**2. கல்வித தகைமை மற்றும் தொழிற்றகைமை :**

| பதவி | தொழில்நுட்ப உதவி (கட்டிட புனரமைப்பு மற்றும் பராமரிப்பு) |
|---|---|
| கல்வித் தகைமை | (அ) பௌதிகவியல்/ இரசாயனவியல் உட்பட விஞ்ஞான பாடத்துறைகளில் 3 பாடங்களில் க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே முறையில் சித்தி அடைதல் ; மற்றும்<br><br>(ஆ) சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்துடன் மொத்தம் 6 பாட விதானங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே முறையில் சித்தியெய்திருத்தல். |
| தொழிற்றகைமை | மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனம் ஆகியவற்றின் மூலம் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ; அல்லது<br><br>தேசிய பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா ; அல்லது<br><br>கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சின் மூலம் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா ; அல்லது<br><br>இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா ; அல்லது<br><br>இலங்கை பொறியியல் நிறுவனத்தின் மூலம் வழங்கப்படுகின்ற பொறியியல் பரீட்சையில் 1 ஆம் கட்டத்தை வெற்றிகரமான முறையில் பூரணப் படுத்தல் ; அல்லது<br><br>கட்டிட புனரமைத்தல் மற்றும் பராமரிப்பு (சிவில் பொறியியல்) துறைக்கு உரித்தான தேசிய தொழிற்பயிற்சி (NVQ) ஆறாம் மட்டத்தினுள் உட்படும் தொழில்நுட்ப பாடநெறி ஒன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததான சான்றிதழ் ; அல்லது<br><br>உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்கூறப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து விதத்திலும் சமம் என இரண்டாம் நிலை மற்றும் முதன் நிலை கல்வியியல் ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில்நுட்ப தகுதிகளைப் பெற்றிருத்தல். |

3. **உடற்றகைமை**.- அனைத்து விண்ணப்பதாரிகளும் நாட்டின் எந்தப் பகுதியிலும் பணி புரிவதற்கும், பதவியின் பணிகளை மேற்கொள்வதற்கு உகந்த உடலியல் மற்றும் உள்ளார்ந்த ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**4. ஏனைய தகுதிகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும் ;

(iii) குறித்த பதவிக்குத் தெரிவுசெய்வதற்கான மேற்குறித்த சகல தகைமைகளையும் பூர்த்திசெய்திருக்க வேண்டும் என குறித்த விளம்பரத்தில்/ வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அவ்வாறாகவே குறித்த தகைமைகளைப் பூர்த்திசெய்து இருக்க வேண்டும்.

5. **வயது**.- விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாது அல்லது 30 வயதுக்கு அதிகரிக்காது இருக்க வேண்டும்.

6. **சேர்த்துக்கொள்ளும் முறை**.- எழுத்துமூலப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சையின் முடிவுகளின்படி தெரிவுசெய்யப்படுவர்.

7. **சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூலப் பரீட்சை**.- இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளரினால் அல்லது தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் கொழும்பு நகரத்தில் மாத்திரம் இடம்பெறும்.

| வினாத்தாள் | பாடவிதானம் | காலம் | மொத்தப் புள்ளி | அடைவு மட்டம் |
|---|---|---|---|---|
| புத்திக் கூர்மையினை பரிசீலனை செய்தல் | விண்ணப்பதாரியின் நினைவாற்றலின் தர்க்கத் தன்மை, நினைவாற்றலின் ஆராய்வுத் தன்மை, முடிவெடுக்கும் ஆற்றலினைப் பரிசீலிக்கும் வகையில் அமைந்த வினாக்களினைக் கொண்ட வினாப் பத்திரம் | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| பொதுப் பரீட்சை விடயதானம் தொடர்பான தொழில்நுட்ப பரிசீலனை | பதவிக்கு உரித்தான பல்வகைமை பொருந்திய கேள்விகள் மற்றும் தெரிவுசெய்து பதிலளிக்கக்கூடிய வகையில் கட்டமைப்பு வினாக்களைக் கொண்ட வினாப் பத்திரம் | 1 மணித்தியாலம் | 100 | 40 |

8. **பொதுவான நேர்முகப் பரீட்சை**.- அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவின் மூலம் தகைமைகள் பரிசீலனை செய்வதற்கு மாத்திரம் நடாத்தப்படுவதுடன் அதற்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

9. **சம்பளத் திட்டம்**.- ரூ. 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550.

10. **சேவைக்கு அமர்த்துவதற்கான நிபந்தனைகள்** :

* தேர்ந்தெடுக்கப்படும் அதிகாரிகள் நாட்டின் எந்தப் பாகங்களிலும் பணிபுரிவதற்கான விருப்பம்.
* நியமிக்கப்படும் பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்குரியதுமாகும்.
* குறித்த நபர்கள் ஓய்வூதியத் திட்டங்களுக்குத் தமது பங்களிப்பைச் செய்தல் வேண்டும்.

11. இவ்விளம்பரத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவங்களுக்கு அமைவாக 1 தொடக்கம் 5 வரையான விடயங்கள் முதல் பக்கத்திலும் மற்றைய விடயங்கள் இரண்டாம் மற்றும் மூன்றாம் பக்கங்களில் அமையும் வகையில் ஏ4 வடிவிலான தாளில் இரு புறங்களிலும் அமையும் வகையில் விண்ணப்பப்படிவம் அமையப்பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவமும் அமைதல் வேண்டும்.

12. விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட மாட்டாது. காலம் தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

*13.* தகுதிபெற்ற விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் இரு வாரங்களுக்கு முன்னர் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்துக்குப் பரீட்சை தொடர்பில் அறிவிக்கப்படும்.

(i) தபாலில் காணாமல் போதல் அல்லது காலதாமதம் போன்ற முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ii) "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05" என்ற விலாசத்துக்கு அன்றி வேறு எந்த விலாசத்துக்கும் அனுப்பப்படும் விண்ணப்பம் தொடர்பான முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) அரச சேவையில் கடமைபுரியும் நபர்கள் திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் குறித்த பதவியில் இருந்து விடுவிப்பதற்கு இணங்குவதாகவும் தெரிவிக்கப்படல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியொன்றைக் கைவசம் வைததிருத்தல் நல்லது.

(v) பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் விண்ணப்பதாரிகள் பதவிக்கான தகைமைகளைக் கொண்டுள்ளார்கள் எனக் கருத்திற்கொள்ளக் கூடாது.

*14.* இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு 7 நாட்களுக்கு முன்னர் பிரவேசப்பத்திரம் கிடைக்கப்பெறாவிட்டால் கீழ்க்காணும் விடயங்களின் அடிப்படையில் "அரசாங்கத் தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05" எனும் விலாசத்துக்கு அறியத்தரவும். (தொலைபேசி இலக்கம் : 011-2514266 ; தொலைநகல் இலக்கம் : 011-2514092).

* விண்ணப்பிக்கும் விலாசம் ;
* பரீட்சையின் பெயர் ;
* விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
* தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் ;
* விண்ணப்பதாரியின் தபால் விலாசம் ;
* விண்ணப்பத்தின் நிழற்பிரதி ;
* விண்ணப்பத்தினைத் தபாலிட்ட தபால் அலுவலகம் மற்றும் பதிவிலக்கம் மற்றும் திகதி ;
* பரீட்சைக்கான பணத்தினைச் செலுத்தி இருப்பின் அதன் நிழற்பிரதி ;
* பிரவேசப்பத்திரத்தை அனுப்புவதற்கான உமது தொலைநகல் இலக்கம்.

*15.* **விண்ணப்பிக்கும் முறை** :

(அ) விண்ணப்பதாரிகள் இத்துடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்து குறித்த தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில்நுட்ப உதவியாளர் (கட்டிட புனரமைப்பு மற்றும் பராமரிப்பு) பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017" என்று குறிப்பிட்டு 2017.03.03 ஆந் திகதிக்கு முன்னர் "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05" என்ற விலாசத்துக்குப் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதி : 2017.03.03 ஆகும்.

(இ) "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05" என்ற விலாசத்துக்கு எழுதப்பட்ட கொழும்பு பெரிய தபால் நிலையத்தில் 1,000 ரூபா பெறுமதியான பணத்தொகையினை வைப்புச் செய்ய வேண்டும். அத்தொகை மீளத் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.

*16.* **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- இலங்கை நிர்வாக சேவையில்/ கல்வி நிர்வாக சேவையில்/ அரசாங்க கணக்காளர் சேவையில்/ அரச பாடசாலை ஒன்றில் அதிபராக/ சமாதான நீதவானாக/ சட்டத்தரணி அல்லது பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இல் தரப்படுத்தலின் அடிப்படையில் மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்ட அரச சேவையில் நிரந்தர ஓய்வூதியம் பொருந்திய பதவியை வகிக்கும் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**கவனத்திற்கு :**

* விண்ணப்பத்தின் அனைத்து உறுப்புரைகளும் முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாக மற்றும் தகவல்களின் உண்மைத் தன்மை தொடர்பில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் ;

* தகைமைகளுக்கு உரித்தாக சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்பட வேண்டும் ;

* மேற்படி சேர்த்துக்கொள்ளப்படும் அனைவரும் அரச சேவைகளில் பணிபுரிபவர்களுக்கு உரித்தான சட்ட திட்டங்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச சேவை ஆணைக்குழுவின் சட்டதிட்டங்கள், நிர்வாகக் கோவையின் சட்ட திட்டங்களை, அரசாங்க தகவல் திணைக்களத்தினால் பின்பற்றப்படும் கொள்கைகளுக்கு, நிதி சட்டதிட்டங்களுக்கு மற்றும் வேறு சட்டதிட்டங்களுக்கு, அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு மற்றும் கட்டளைகளுக்கு அடிபணிய வேண்டும் ;

* வெற்றிடங்களின் எண்ணிக்கை முழுமையாக அல்லது தேவையான அளவு பூரணப்படுத்துவதற்கான அதிகாரம் தகவல் பணிப்பாளர் நாயகத்துக்கே உண்டு ;

* பதவிகளுக்குச் சேர்த்துக்கொள்வது தொடர்பில் இவ்வறிவித்தலில் உள்ளடங்கும் அல்லது உள்ளடங்காத ஏதேனும் ஒரு தகவல் தொடர்பில் பிரச்சினை ஒன்று எழுந்தால் அது தொடர்பில் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தின் தீர்ப்பே இறுதியாகும். அதேபோன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய அறிவித்தல்களில் ஏதேனும் சந்தேகங்கள் எழும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

(கலாநிதி) ரங்க கலன்சூரிய,
அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க தகவல் திணைக்களம்,
இல. 163, கிருலப்பனை மாவத்தை,
கொழும்பு,
2017, சனவரி 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரசாங்க தகவல் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் பிரிவு - 03 சேவை மட்டத்தின் (MN - 03 - 2016) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கட்டிட புனரமைப்பு மற்றும் பராமரிப்பு) பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2

(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்.)

1. 1.1முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr./Mrs./Miss. (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

Ex : Mr./Mrs./Miss. SILVA, A. B. :----.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. 2.1 தனிப்பட்ட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 தனிப்பட்ட முகவரி (சிங்களம்/ தமிழ்) :----.

3. 3.1 பிறந்த திகதி :

ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

3.2 விண்ணப்ப முடிவுத் திகதியின்போது வயது :

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

4. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----.

5. பெண்/ ஆண் :----.

6. கல்வித் தகைமைகள் :

(அ) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சை :

வருடம் :----. பரீட்சை எண் :----.

க. பொ. த. சாதாரண தரம் :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ஆ) கல்விப் பொதுத்தராதர (உயர் தர) பரீட்சை :

வருடம் :----. பரீட்சை எண் :----.

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

7. தொழில்சார் தகைமைகள்/ தொழில்நுட்ப தகைமைகள் :

7.1 பெற்றுள்ள பட்டம்/ டிப்ளோமா :----.

7.2 குறித்த பட்டம்/ டிப்ளோமா வழங்கிய நிறுவனம் :----.

7.3 குறித்த பட்டம்/ டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி :----.

8. வேறு தகைமைகள் :----.

9. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டதாக உறுதிப்படுத்தல் :

(அ) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் :----.

(ஆ) பற்றுச்சீட்டு இலக்கமும் மற்றும் திகதியும் :----.

(இ) செலுத்தப்பட்ட பணத்தொகை :----.

1,000 ரூபா பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியதற்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

10. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல்.**- மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானவை எனவும் பிழையற்றவை எனவும் உறுதி மொழிகின்றேன். இப்பரீட்சை தொடர்பில் ஏதேனும் பிழையான தகவல் ஒன்று வழங்கப்பட்டிருப்பின் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ எனது பரீட்சார்த்த தகைமை நிராகரிக்கப்படக்கூடும் எனவும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் தெரியவந்தால் குறித்த பதவியில் இருந்து நீக்கப்படலாம் எனவும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ................................................ எனும் முகவரியில் வதியும் ................................ ......................... என்பவரைத் தனிப்பட்ட ரீதியில் நான் நன்கறிவேன் எனவும், இன்று அவர் எனது முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டாரெனவும், குறித்த பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

முழுப்பெயர் :----.
பதவி :----.
பதவி முத்திரை :

*2-88*

---

## அரசாங்க தகவல் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் பிரிவு - 03 சேவை மட்டத்தின் (MT - 01 - 2016) தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்காக சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017

அரசாங்க தகவல் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் பிரிவு - 03 சேவை மட்டத்தின் (MT - 01 - 2016) தொழில்நுட்ப உதவியாளர் 04 பதவிக்காக திறந்த முறையின்கீழ் தெரிவுசெய்வதற்காகப் பின்வரும் தகைமைகளைக் கொண்ட ஆண்/பெண் விண்ணப்பதாரிகளிடத்தில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **தெரிவுசெய்யப்படும் முறை**.- பரீட்சை ஆணையாளரினால் அல்லது அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய தகைமை அடிப்படையில் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் பின்வரும் துறைகளுக்காக தெரிவுசெய்யப்பட உள்ளனர்.

| | |
|---|---|
| 1. | புகைப்படப் பிடிப்பாளர் |
| 2. | ஒளிப்பதிவாளர் |
| 3. | தொகுப்பாக்கம் |
| 4. | ஒலிப்பதிவு தொடர்பான தொழில்நுட்பவியலாளர் |
| 5. | வாகன பராமரிப்பு |
| 6. | மின்னுபகரணங்கள் பராமரிப்பு |
| 7. | கட்டிட பராமரிப்பு |

2. பதவியின் தன்மை.- நிரந்தரமானது. ஓய்வூதியத்துக்குரியது.

3. சம்பள இலக்கம் : MT - 01 - 2016

**சம்பளத் திட்டம்** : ரூ. 29,840 - 10 x 300 - 11 x 350 - 10 x 560 - 10 x 660 - 48,890

(பொது நிர்வாக சுற்றறிக்கையின் இலக்கம் 3/2016 அடிப்படையில்)

4. **கல்வித் தகைமை மற்றும் தொழிற்றகைமை :**

| | |
|---|---|
| பதவி | தொழில்நுட்ப உதவி (கட்டிட புனரமைப்பு மற்றும் பராமரிப்பு) |
| கல்வித் தகைமை | மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட இரு அமர்வுகளுக்கு மேலாகாத வாரங்களில் 06 பாட விதானங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல். |
| தொழிற்றகைமை | ஒவ்வொரு துறைகளின் பணிகளுக்கு ஏற்ப இரண்டாம் நிலை மற்றும் முதன் நிலை கல்வியியல் ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் பயிற்சி (NVQ) ஐந்தாம் மட்டத்தினுள் உட்படும் தொழில்நுட்ப பாடநெறி ஒன்றை வெற்றிகரமாக பூர்த்திசெய்ததான சான்றிதழ்.<br><br>துறை என்பது, அரசாங்க தகவல் திணைக்களத்தின் திரைப்படப் பிரிவின் புகைப்படப் பிடிப்பாளர், ஒளிப்பதிவாளர், தொகுப்பாக்கம், ஒலிப்பதிவு தொடர்பான தொழில்நுட்பவியலாளர், வாகன பராமரிப்பு, மின்னுபகரணங்கள் பராமரிப்பு, கட்டிட பராமரிப்பு ஆகியவை உள்ளடங்கும். |

5. **உடற்றகைமை**.- அனைத்து விண்ணப்பதாரிகளும் நாட்டின் எந்தப் பகுதியிலும் பணி புரிவதற்கும், பதவியின் பணிகளை மேற்கொள்வதற்கு உகந்த உடலியல் மற்றும் உள்ளார்ந்த ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. **ஏனைய தகுதிகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) நன்நடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும் ;

(iii) குறித்த பதவிக்குத் தெரிவுசெய்வதற்கான மேற்குறித்த சகல தகைமைகளையும் பூர்த்திசெய்திருக்க வேண்டும் என குறித்த விளம்பரத்தில்/ வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அவ்வாறாகவே குறித்த தகைமைகளைப் பூர்த்திசெய்து இருக்க வேண்டும்.

7. **வயது**.- விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாது அல்லது 35 வயதுக்கு அதிகரிக்காது இருக்க வேண்டும்.

8. **சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூலப் பரீட்சை**.- இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளரினால் அல்லது தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் கொழும்பு நகரத்தில் மாத்திரம் இடம்பெறும்.

| வினாத்தாள் | பாடவிதானம் | காலம் | மொத்தப் புள்ளி | அடைவு மட்டம் |
|---|---|---|---|---|
| புத்திக் கூர்மையினை பரிசீலனை செய்தல் | விண்ணப்பதாரியின் நினைவாற்றலின் தர்க்கத் தன்மை, நினைவாற்றலின் ஆராய்வுத் தன்மை, முடிவெடுக்கும் ஆற்றலினைப் பரிசீலிக்கும் வகையில் அமைந்த வினாக்களினைக் கொண்ட வினாப் பத்திரம் | 1 மணித்தியாலம் | 100 | 40 |

| வினாத்தாள் | பாடவிதானம் | காலம் | மொத்தப் புள்ளி | அடைவு மட்டம் |
|---|---|---|---|---|
| விடயதானம் தொடர்பான பரிசீலனை | பதவிக்கு உரித்தான பல்வகைமை பொருந்திய கேள்விகள் மற்றும் தெரிவுசெய்து பதிலளிக்கக்கூடிய வகையில் கட்டமைப்பு வினாக்களைக் கொண்ட வினாப் பத்திரம் | 1 மணித்தியாலம் | 100 | 40 |

9. **பொதுவான நேர்முகப் பரீட்சை**.- நேர்முகப் பரீட்சையானது தகைமைகள் பரிசீலனை செய்வதற்கு மாத்திரம் நடத்தப்படுவதுடன் அதற்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

10. **சேவைக்கு அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**.- அனைத்து பதவிகள் தொடர்பிலும் அரச சேவை ஆணைக்குழுவின் 1589/30 ஆம் இலக்க மற்றும் 2009.02.20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் சட்டத்திட்டங்களில் காணப்படும் நிபந்தனைகளுக்கு மற்றும் நிர்வாகக் கோவையின் விதிகளுக்கு அமைவானது.

11. இவ்விளம்பரத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவங்களுக்கு அமைவாக 1 தொடக்கம் 5 வரையான விடயங்கள் முதல் பக்கத்திலும் மற்றைய விடயங்கள் இரண்டாம் மற்றும் மூன்றாம் பக்கங்களில் அமையும் வகையில் ஏ4 வடிவிலான தாளில் இரு புறங்களிலும் அமையும் வகையில் விண்ணப்பப்படிவம் அமையப்பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவமும் அமைதல் வேண்டும்.

12. விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட மாட்டாது. காலம் தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

13. தகுதிபெற்ற விண்ணப்பங்கள் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் இரு வாரங்களுக்கு முன்னர் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்துக்குப் பரீட்சை தொடர்பில் அறிவிக்கப்படும்.

(i) தபாலில் காணாமல் போதல் அல்லது காலதாமதம் எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ii) "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05" என்ற விலாசத்துக்கு அன்றி வேறு எந்த விலாசத்துக்கும் அனுப்பப்படும் விண்ணப்பம் தொடர்பான முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(iii) அரச சேவையில் கடமை புரியும் நபர்கள் திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் குறித்த பதவியில் இருந்து விடுவிப்பதற்கு இணங்குவதாகவும் தெரிவிக்கப்படல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியொன்றைக் கைவசம் வைததிருத்தல் நல்லது.

(v) பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் விண்ணப்பதாரிகள் பதவிக்கான தகைமைகளைக் கொண்டுள்ளார்கள் எனக் கருத்திற்கொள்ளக் கூடாது.

14. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு 7 நாட்களுக்கு முன்னர் பிரவேசப்பத்திரம் கிடைக்கப்பெறாவிட்டால் கீழ்க்காணும் விடயங்களின் அடிப்படையில் "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05" எனும் விலாசத்துக்கு அறியத்தரவும். (தொலைபேசி இலக்கம் : 011-2514266 : தொலைநகல் இலக்கம் : 011-2514092).

* விண்ணப்பிக்கும் விலாசம் ;
* பரீட்சையின் பெயர் ;
* விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
* தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் ;
* விண்ணப்பதாரியின் தபால் விலாசம் ;
* விண்ணப்பத்தின் நிழற்பிரதி ;
* விண்ணப்பத்தினைத் தபாலிலிட்ட தபால் அலுவலகம், பதிவிலக்கம் மற்றும் திகதி ;
* பரீட்சைக்கான பணத்தினைச் செலுத்தி இருப்பின் அதன் நிழற்பிரதி ;
* பிரவேசப்பத்திரத்தை அனுப்புவதற்கான உமது தொலைநகல் இலக்கம்.

15. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பதாரிகள் இத்துடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்து குறித்த தபால் உறையில் வலதுபக்க மேல் மூலையில் "தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017" என்று சுட்டிக்காட்டி 2017.03.03 ஆந் திகதிக்கு முன்னர் "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05" என்ற விலாசத்துக்குப் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதி : 2017.03.03 ஆகும்.

(இ) "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05" என்ற விலாசத்துக்கு எழுதப்பட்ட கொழும்பு பெரிய தபால் நிலையத்தில் 1,000 ரூபா பெறுமதியான பணத்தொகையினை வைப்புச் செய்ய வேண்டும். அத்தொகை மீளத் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.

16. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.**- இலங்கை நிர்வாக சேவையில்/ கல்வி நிர்வாக சேவையில்/ அரசாங்க கணக்காளர் சேவையில்/ அரச பாடசாலை ஒன்றில் அதிபராக/ சமாதான நீதவானாக/ சட்டத்தரணி அல்லது பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/ 2006 இன் தரப்படுத்தலின் அடிப்படையில் மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்ட அரச சேவையில் நிரந்தர ஓய்வூதியம் பொருந்திய பதவியை வகிக்கும் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**கவனத்திற்கு :**

* விண்ணப்பத்தின் அனைத்து உறுப்புரைகளும் முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாக மற்றும் தகவல்களின் உண்மைத் தன்மை தொடர்பில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் ;

* தகைமைகளுக்கு உரித்தாக சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்பட வேண்டும் ;

* மேற்படி சேர்த்துக்கொள்ளப்படும் அனைவரும் அரச சேவைகளில் பணிபுரிபவர்களுக்கு உரித்தான சட்ட திட்டங்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச சேவை ஆணைக்குழுவின் சட்டதிட்டங்கள், நிர்வாகக் கோவையின் சட்ட திட்டங்களை, அரசாங்க தகவல் திணைக்களத்தினால் பின்பற்றப்படும் கொள்கைகளுக்கு, நிதி சட்டதிட்டங்களுக்கு மற்றும் வேறு சட்டதிட்டங்களுக்கு, அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் சட்டதிட்டங்களை மற்றும் கட்டளைகளுக்கு அடிபணிய வேண்டும் ;

* வெற்றிடங்களின் எண்ணிக்கை முழுமையாக அல்லது தேவையான அளவு பூரணப்படுத்துவதற்கான அதிகாரம் தகவல் பணிப்பாளர் நாயகத்துக்கே உண்டு ;

* பதவிகளுக்குச் சேர்த்துக்கொள்வது தொடர்பில் இவ்வறிவித்தலில் உள்ளடங்கும் அல்லது உள்ளடங்காத ஏதேனும் ஒரு தகவல் தொடர்பில் பிரச்சினை ஒன்று எழுந்தால் அது தொடர்பில் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தின் தீர்ப்பே இறுதியாகும். அதேபோன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய அறிவித்தல்களில் ஏதேனும் சந்தேகங்கள் எழும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

(கலாநிதி) ரங்க கலன்சூரிய,
அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க தகவல் திணைக்களம்,
இல. 163, கிருலப்பனை மாவத்தை,
கொழும்பு,
2017, சனவரி 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரசாங்க தகவல் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பப் பிரிவு - 03 சேவை மட்டத்தின் (MT - 01 - 2016) தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2

☐

(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்.)

1. 1.1முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr./Mrs./Miss. (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

Ex : Mr./Mrs./Miss. SILVA, A. B.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. 2.1 தனிப்பட்ட விலாசம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 தனிப்பட்ட விலாசம் (சிங்களம்/ தமிழ்) :----.

3. 3.1 பிறந்த திகதி :

ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

3.2 விண்ணப்ப முடிவுத் திகதியின்போது வயது :

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

4. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----.

5. பெண்/ ஆண் :----.

6. கல்வித் தகைமைகள் :

(அ) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரப்) பரீட்சை :

வருடம் :----. பரீட்சை எண் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

(ஆ) தொழில்சார் தகைமைகள் :----.

(இ) வேறு தகைமைகள் :----.

7. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டதாக உறுதிப்படுத்தல் :

(அ) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் :----.

(ஆ) பற்றுச்சீட்டு இலக்கமும் மற்றும் திகதியும் :----.

(இ) செலுத்தப்பட்ட பணத்தொகை :----.

பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியதற்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும். ரூபா 1,000.00

8. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல்.- இங்கு குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானவை எனவும் பிழையற்றவை எனவும் உறுதி மொழிகின்றேன். இப்பரீட்சை தொடர்பில் ஏதேனும் பிழையான தகவல் ஒன்று வழங்கப்பட்டிருப்பின் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ எனது பரீட்சை அனுமதிப்படிவம் நிராகரிக்கப்படக்கூடும் எனவும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் தெரியவந்தால் குறித்த பதவியில் இருந்து நீக்கப்படலாம் எனவும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் .................................................. எனும் முகவரியில் வதியும் ................................. .......................... என்பவரைத் தனிப்பட்ட ரீதியில் நான் நன்கறிவேன் எனவும், இன்று அவர் எனது முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டாரெனவும், குறித்த பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

முழுப்பெயர் :----.
பதவி :----.
பதவி முத்திரை :

2-87

---

## கலாசார அலுவல்கள் திணைக்களம்

அரச ஓவிய சிற்ப விழா -2017

உள்ளக அலுவல்கள் , வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச கற்புலக்கலை ஆலோசனைக்குழு ஏற்பாடு செய்கின்ற அரச ஓவிய சிற்ப விழாவிற்கான விண்ணப்பங்கள் 2017, சனவரி மாதம் 20 ஆந் திகதி தொடக்கம் 2017, மாச்சு மாதம் 10 ஆந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் ஓவியத்தின் பெயர், வரைந்த ஓவியத்தின் 02 புகைப்படப் பிரதிகள், சிற்பம் அல்லது நிறுவல் படைப்பின் முன்பக்கம் உட்பட மற்றைய இருபக்கங்களும் எடுக்கப்பட்ட 03 புகைப்படப் பிரதிகளுடன் உங்களுடைய கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம் ஒன்றினையும் உள்ளடக்கிய இறுவெட்டுடன் “பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக கொண்டு வந்து கையளிக்கலாம். (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “அரச ஓவிய சிற்ப விழா 2017” எனக் குறிப்பிடல் வேண்டும்) உங்களால் அனுப்பப்படும் படைப்புக்கள் பிரபல நடுவர்கள் குழுவினரால் மதிப்பீடு செய்யப்பட்டு தெரிவுசெய்யப்படும் படைப்புக்களின் மூலப் படைப்பினை நாம் அறிவிக்கும் திகதியில் குறிப்பிடப்படும் இடத்தில் கொண்டுவந்து கையளித்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் அனைத்துப் படைப்புகளும் 2017 அரச ஓவிய சிற்ப விழாவின்போது கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் என்பதுடன் அவற்றிற்கு சான்றிதழ் மற்றும் வெற்றி பெறுபவர்களுக்கு விருது, சான்றிதழ் மற்றும் பணப்பரிசு என்பனவும் வழங்கப்படும்.

**போட்டிப் பிரிவுகள் :**

* ஓவியம்

1. மேற்பூச்சு
2. நிலக்காட்சி
3. ஆக்கத்திறன் படைப்புக்கள்
4. பாரம்பரிய ஓவியத்தை பிரதிபடுத்தல் ( ஓவியப் பிரதிப்படுத்தலின்போது இடத்தின் சுருக்கக் குறிப்பினை வழங்கவும் மற்றும் சிற்ப படைப்பின் புகைப்பட பிரதியை சமர்ப்பித்தலும் கட்டாயமானதாகும்)

* சிற்பம்

1. மேற்பூச்சுப் படைப்புக்கள்
2. ஆக்கத்திறன் படைப்புக்கள்
3. பாரம்பரிய சிற்பம் ( தேவையான நிரந்தர தலைப்பினை உபயோகிக்க முடியும்)

* நிறுவல் சிற்பம்

(வழங்கப்படும் இடவசதியின் அதி கூடிய அளவு 8 x 8 x 8 (உயரம், நீளம், அகலம் ஆகும்)

* அச்சு விதி (Printing Make)

**போட்டி நிபந்தனைகள்:-**

1. இதற்கு விண்ணப்பிப்பவர்கள் 18 வயதிற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.
2. நீங்கள் விரும்பிய தலைப்பினை தெரிவு செய்து கொள்ள முடியும்.
3. நீங்கள் விரும்பிய வடித்தில் ஓவியம் தீட்டலாம்.
4. போட்டிப் பிரிவில் நீங்கள் விரும்பிய பிரிவில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளில் படைப்புக்களை சமர்ப்பிக்கலாம்.
5. ஒரு பிரிவில் ஒரு படைப்பினை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. நிறுவல் சிற்பத்தின்போது சமர்ப்பிக்கும் படைப்புக்கள் குறித்த அளவினைக் கொண்டிருத்தல் வேண்டும். (உயரம் 8 அடி, அகலம் 8 அடி, நீளம் 8 அடி ஆக)
7. விண்ணப்பப்படிவத்தின் தகவல்களை சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் சரியாகவும் தெளிவாகவும் வழங்க வேண்டும். தகவல்கள் பிழையாகவோ அல்லது தெளிவற்றதாகவோ இருப்பின் போட்டியில் இருந்து நிராகரிக்கப்படும்.
8. இறுவட்டு மற்றும் புகைப்படத்தின் பின்புறத்தில் பெயர், முகவரி, ஒப்பம் என்பன தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.
9. தங்களால் அனுப்பப்படும் படைப்புக்களின் புகைப்படங்கள் மற்றும் இறுவட்டுக்கள் என்பன திருப்பி வழங்கப்பட மாட்டாது.
10. முதற் சுற்றின்போது தங்களால் அனுப்பப்படும் படைப்புக்களின் புகைப்படங்கள் பிரபல நடுவர் குழுவினரால் மதிப்பீடு செய்யப்பட்டு தெரிவு செய்யப்படும் படைப்புக்கள் மாத்திரம் கண்காட்சிக்காக சமர்ப்பிக்கப்படும். மேற்படி படைப்புக்கள் மீண்டும் தங்களுக்கு வழங்கப்படும்.
11. கண்காட்சியின் பின்பு மறுதினமே தங்களின் படைப்புக்களை அகற்ற வேண்டும் என்பதுடன், அகற்றப்படாத படைப்புக்களுக்கு திணைக்களம் பொறுப்புக் கூறாது.

பணிப்பாளர்,
கலாசார அலுவல்கள் திணைக்களம்,

கலாசார அலுவல்கள் திணைக்களம்,
8 ஆம் மாடி,
செத்சிறிபாய,
பத்தரமுல்லை.

தொடர்புகளுக்கு.- 011- 2882551/ 011-2872031
மேலதிக விபரங்களுக்கு.- www.culturaldept.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரச ஓவிய சிற்ப விழா- 2017**

கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் தடித்த எழுத்துக்களினால் நிரப்பப்படுதல் வேண்டும்.

| | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| முழுப்பெயர் : | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |

முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

முதலெழுத்துடன் பெயர் :

தொலைபேசி- இல்லம் : கைபேசி :

மின்னஞ்சல் :

நிரந்தர முகவரி :

பிறந்த திகதி : தி மா ஆ

தேசிய ஆள் அடையாள அட்டை இல.

பிரிவுகள் :

| ஓவியம் | சிற்பம் |
|---|---|
| ☐ பிரதிமை ஓவியம் | ☐ மேற்பூச்சுப் படைப்புக்கள் |
| ☐ நில உருவக் காட்சி | ☐ புத்தாக்க ஒழுங்கமைப்பு |
| ☐ ஆக்கத்திறன் படைப்புக்கள் | ☐ பாரம்பரிய சிற்பம் |
| ☐ பாரம்பரிய ஓவியத்தை பிரதிபடுத்தல் (ஓவியப்பிரதி படுத்தலின் போது இடத்தின் சுருக்கக் குறிப்பினை வழங்கவும் மற்றும் சிற்பப் படைப்பின் புகைப்பட பிரதியை சமர்ப்பித்தலும் கட்டாயமானதாகும்.) | (தேவையான நிரந்தர தலைப்பினை பயன் படுத்த முடியும்.) |
| ☐ நிறுவல் சிற்பம் | ☐ அச்சுவிதி |
| வழங்கப்படும் இடவசதியின் அதி கூடியளவு 8' X 8' X 8' (உயரம், நீளம், அகலம் ஆகும்.) | |

நிர்மாணத்தின் தலைப்பு

நிர்மாணத்தின் தலைப்பு : உயரம் நீளம் அகலம்

காட்சிப்படுத்தல் மேசையில் காட்சிப்படுத்தல் சுவரில்

தொங்க விடுதல்

மைதானத்தில் ஏனையவை (.....)

நிர்மாணத்தின் பெறுமதி ரூபா

மேற்குறிப்பிடப்பட்ட படைப்பு என்னால் உருவாக்கப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துவதுடன், அவை சரியானவையெனவும் உண்மையானவையெனவும் தெரிவிப்பதுடன் இப்போட்டிக்கான விதிமுறைகளுக்கு உடன்படுகின்றேன் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
கையொப்பம்.

திகதி :----.

*2- 104/ 1*

## கலாசாரத் திணைக்களம்

*அரச சிறுவர் ஓவிய விழா -2017*

*உள்ளக அலுவல்கள் , வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச கற்புலக்கலை ஆலோசனைக்குழு ஏற்பாடு செய்கின்ற "அரச சிறுவர் ஓவிய விழா - 2017" இன் ஆரம்ப சுற்றுக்காக ஓவியங்களை 2017, சனவரி மாதம் 20 ஆந் திகதி தொடக்கம் 2017, மாச்சு மாதம் 10 ஆந் திகதி வரை கொழும்பு 07, தேசிய கலாபவனத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். இவ் ஓவியங்களிலிருந்து ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து 50 ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதோடு சம்பந்தப்பட்ட வெற்றியாளர்கள் இரண்டாம் சுற்றுக்காக முன்னனுப்பப்படுவர். இரண்டாம் சுற்றுப் போட்டி மாகாண மட்டத்தில் விசேட பயிற்சி பட்டறை மூலம் நடாத்தப்படுவதுடன் முதலாம் சுற்றில் அனைத்து வெற்றியாளர்களுக்கும் அத்திகதிய சான்றிதழ்கள் வழங்கப்படும். இரண்டாம் சுற்றில் தீட்டப்படுகின்ற ஓவியங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் படைப்புக்கள் "அரச சிறுவர் ஓவிய விழா - 2017" இற்காக சமர்ப்பிக்கப்படும். இவற்றில் இருந்து வெற்றிபெறும் பிள்ளைகளுக்கு அரச சிறுவர் ஓவிய விழாவின் போது விருதுகள் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குவதற்கான நடவடிக்கைககள் மேற்கொள்ளப்படும்.*

போட்டிப் பிரிவுகள் :

| | | |
|---|---|---|
| *1. பாலர் பிரிவு* | வயதெல்லை | *5-6* |
| *2. சிறுவர் பிரிவு* | வயதெல்லை | *7-9* |
| *3. கனிஷ்ட பிரிவு* | வயதெல்லை | *10-12* |
| *4. சிரேஷ்ட பிரிவு* | வயதெல்லை | *13-15* |
| *5. அதி சிரேஷ்ட பிரிவு* | வயதெல்லை | *16-18* |

போட்டி நிபந்தனைகள் :

1. *நீங்கள் விரும்பிய தலைப்பினை தெரிவு செய்து கொள்ள முடியும்.*
2. *நீங்கள் விரும்பிய வடித்தில் ஓவியம் தீட்டலாம்.*
3. *ஓவியம் 18 X 14 அங்குலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.*
4. *ஒருவர் ஒரு ஆக்கத்தை மாத்திரமே போட்டிக்கு சமர்ப்பிக்க முடியும்.*
5. *அனுப்பப்படும் ஆக்கம் இதற்கு முன்னர் வேறு எந்த போட்டிக்காகவும் சமர்ப்பித்ததாக இருக்கக் கூடாது.*
6. ஓவியம் அனுப்பும் போது தங்களின் சொந்த வதிவிட மாவட்டத்திலிருந்து அனுப்புதல் வேண்டும்.
7. தங்களால் அனுப்பப்படும் ஆக்கங்களில் நடுவர் குழுவினரால் தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் மட்டும் குறிப்பிட்ட மாவட்டத்தில் போட்டிக்காக தெரிவுசெய்யப்படுவர் . போட்டிகள் நடைபெறும் திகதி, நேரம் மற்றும் இடம் என்பன பின்னர் அறிவிக்கப்படும்.
8. ஓவியத்தின் பின்புறத்தில் கீழ்க்காணப்படும் விடயங்களை சரியான முறையில் தமிழ் அல்லது ஆங்கில மொழியில் பூர்த்தி செய்தல் வேண்டும். இந்த விடயங்களை சரியான முறையில் வழங்கப்படாத ஆக்கங்கள் போட்டியிலிருந்து நீக்கப்படும்.
9. இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள அருகில் உள்ள பிரதேச செயலகத்தில் அல்லது மாவட்டச் செயலகத்தில் உள்ள கலாசார உத்தியோகத்தரை நாடவும்.

| | |
|---|---|
| முழுப்பெயர் | :.................................................................................................... |
| முதலெழுத்துக்களுடன் பெயர் | :.................................................................................................... |
| பிறந்த திகதி | :.................................................................................................... |
| *2016.12.31 ஆம் திகதிக்கு வயது* | :.................................................................................................... |
| போட்டிப் பிரிவு | :.................................................................................................... |
| சொந்த முகவரி | :.................................................................................................... |
| நிரந்தர வதிவிட மாவட்டம் | :.................................................................................................... |
| தொலைபேசி இல. | :.................................................................................................... |

முதற்பக்கத்தில் இருக்கும் ஓவியம் எனது படைப்பு என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

ஓவியங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

தேசிய ஒருங்கிணைப்பாளர்,
அரச கட்புல கலை ஆலோசனை குழு,
தேசிய கலா பவனம்,
ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,
கொழும்பு 7.

ஓவியம் அனுப்பும் போது கடித உறையின் அல்லது பொதியின் இடதுபக்க மேல் மூலையில் "அரச சிறுவர் ஓவிய விழா-2017" என்று குறிப்பிடவும்.

பணிப்பாளர்,
கலாசார அலுவல்கள் திணைக்களம்.

கலாசார அலுவல்கள் திணைக்களம்,
8 ஆம் மாடி,
செத்சிறிபாய,
பத்தரமுல்லை.

தொடர்புகளுக்கு : 011- 2882551/ 011-2872031
மேலதிக விபரங்களுக்கு : www.culturaldept.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

2- 104/ 2

---

## அஞ்சல் திணைக்களம்

அஞ்சல் திணைக்களத்தின் தொழில் வகையில் ஆரம்ப மட்ட திறமையின் III ஆந் தரத்தின் அஞ்சல் சாரதி பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017

Open Competitive Examination For Recruitment to the Post of Postal Service Driver Grade III in the Employee Category of Primary Level Skilled of the Department of Posts – 2017.

இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் தொழில் வகையில் ஆரம்ப மட்ட திறமையின் III ஆந் தரத்தின் அஞ்சல் சாரதி பதவியின் வெற்றிடங்கள் 13 க்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. இந்த அறிவித்தலில் இலக்கம் 01 இல் காணப்படும் நகரங்களில் ஸ்தாபிக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மட்டும் பரீட்சை 2017, மே மாதத்தில் நடைபெறும். பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கும் நகரத்தை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்படமாட்டாது.

1. பரீட்சை நிலையங்கள் :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| யாழ்ப்பாணம் | 03 |

ஏதாவது நகரம் பரீட்சை நிலையம் ஸ்தாபிப்பதற்கு போதுமான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காத பட்சத்தில் அந்த விண்ணப்பதாரிகளுக்கு அருகிலுள்ள வேறு நகரத்தின் பரீட்சை நிலையத்திலோ அல்லது கொழும்பில் மட்டும் பரீட்சையை நடாத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளரால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**2. மொழிமூலம்.**- பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலத்தில் நடைபெறும். விண்ணப்பித்த மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

3. **ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான தகைமைகள் :**

3.1 *கல்வித் தகைமை.*- கல்வி பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத வகையில் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல்.

3.2 *தொழிற் தகைமை.*- மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்டுள்ள D வகுப்பின் (பார வாகனம்) சாரதி அனுமதி பத்திரத்தைப் பெற்றிருத்தல்.

3.3 *அனுபவம்.*- D வகுப்பின் (பார வாகனம்) சாரதி அனுமதி பத்திரம் கிடைத்த பின்னர் 2017.03.02 ஆந் திகதியில் D பந்தியின் பார வாகனம் ஓட்டுவது சம்பந்தமாக மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (நேர்முகப் பரீட்சையின் பொழுது சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்)

3.4 *உடற்தகுதி :*

i. விண்ணப்பதாரி ஆகக் குறைந்த உயரம் 5 அடி 2½ அங்குலத்துக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும். (157 செ.மீ.)

ii. சகல விண்ணப்பதாரிகளும் பகல் காலத்திலும் இரவு காலத்திலும் இலங்கையின் எந்த ஒரு பிரதேசத்திலும் ஒரு நாளில் எந்த நேரத்திலும் சாரதிப் பதவியின் கடமைகளை மேற்கொள்வதற்கு ஏற்ற உடற்தகுதியும் மனோதிடகாத்திரமும் சிறந்த பார்வையும் இருத்தல் வேண்டும். (தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தின் மூலம் உறுதிப்படுத்திய வைத்திய நிறுவனத்தினால் உறுதிப்படுத்திய வைத்தியச் சான்றிதழ் மூலம் அதுபற்றி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்)

3.5 *வேறு :*

i. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாயிருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரி விஷேட குணமுடையவர் என கிராம உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டும்.

iii. ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

iv. பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தேவையான தகைமையைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்வது விண்ணப்பதாரி மேற்படி 03ம் 04ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமை விண்ணப்பம் கோரும் இறுதித் தினமான 2017.03.02 ஆந் திகதியில் சகல முறையிலும் பூர்த்தி செய்திருந்தால் மட்டும்.

4. **வயது எல்லை.**- விண்ணப்பப்படிவம் பாரம் எடுக்கும் இறுதித் தினமான 2017.03.02 ஆந் திகதியில் 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் அதன்படி 1999.03.02 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன் 1972.03.02 ஆந் திகதியில் அல்லது அதன் பின்னர் பிறந்தவர்களுக்கு மட்டும் இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகைமை உண்டு. (தற்பொழுது அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்பவர்களுக்கு ஆகக் கூடிய வயது எல்லை பொருத்தமற்றது)

5. **சம்பளத்திட்டம்.**- இந்தப் பதவிக்கு ரூபா 25,790 - 10 x 270 - 10 x 300 - 10 x 330 - 12 x 350 ரூ. 38,990 மாதாந்த சம்பளம் உரித்தாகும். (2016.02.25 ஆந் திகதி பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் இலக்கம் PL-3-2016 சம்பளத் தொகுதியான இந்த சம்பளத்திட்டம் 2020.01.01 ஆந் திகதி தொடக்கம் அமுலாகும்) பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இல் அட்டவணை 11 க்கு அமைய கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் என்பதுடன் அதன்படி,

| | | |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டுக்கான சம்பளம் | அடிப்படைச் சம்பளம் | ரூ. 15,134/- |
| | கொடுப்பனவு | ரூ. 9,957/- |

6. **ஆட்களைச் சேர்த்துக்கொள்ளும் முறை.**- எழுத்து மூலம் மற்றும் செயல்முறைப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். முதலாவது எழுத்துமூலப் பரீட்சை நடாத்தி அப்பரீட்சையில் சித்தி அடைந்த விண்ணப்பதாரிகளுக்கிடையில் காணப்படும் திறமைக்கேற்ப வெற்றிடங்களின் இரு மடங்கு செயல்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துமூலப் பரீட்சை மற்றும் செயல்முறைப் பரீட்சை போன்ற பரீட்சைகள் இரண்டிலும் கிடைக்கும் புள்ளிகளின் திறமைக்கேற்ப சேர்த்துக் கொள்ளப்படுவர்.

6.1 **எழுத்துமூலப் பரீட்சை.**- எழுத்துமூலப் பரீட்சையை சித்தி அடைவதற்காக ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற வேண்டுமென்பதுடன் இந்தப் பரீட்சை பரீட்சை ஆணையாளரால் இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்ட பரீட்சை நிலையங்களில் நடைபெறும்.

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தி அடைய வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| மோட்டார் வாகன சட்டமும் போக்கு வரத்து விதி முறைகளும் | 02 மணித்தியாலங்கள் | 100 | 40 |

(பாடத்திட்டம்)

i. மோட்டார் வாகன சட்டமூலத்தின் கீழ் சாரதிகளின் பொறுப்பு, வருமான அனுமதிப் பத்திரம் மோட்டார் வாகனம் பதிவு செய்தல் காப்புறுதி மற்றும் கையளித்தல்

ii. நெடுஞ்சாலைச் சட்டம் வழி சமிஞ்சைகள்

iii. மோட்டார் வாகன பொலிஸாரின் பொறுப்பு

6.2 *செயல் முறைப் பரீட்சை.*- எழுத்துமூலப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களின் திறமையை அடிப்படையாகக் கொண்டு வெற்றிடங்களின் எண்ணிக்கையில் இருமடங்கு அஞ்சல் அதிபதியினால் பெயரிடப்பட்ட பரீட்சை சபை மூலம் மேற்கொள்ளப்படும் செயல்முறைப் பரீட்சைக்கு சமூகமளிக்க வேண்டும்.

இந்த செயல்முறைப் பரீட்சையின் பொழுது பின்வரும் விடயத் தகவல்கள் பாவிக்கப்படும் என்பதுடன் கீழே காட்டப்பட்டவாறு புள்ளிகள் பெறப்படுதல் வேண்டும்.

| | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைய வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|
| மோட்டார் இயந்திர விஞ்ஞானம் | 50 | 20 |
| மோட்டார் வாகன சட்டமூலம் மற்றும் வீதிச் சட்டம் | 50 | 20 |

7. **சேவையில் அமர்த்தும் சரத்துக்கள் மற்றும் நிபந்தனைகள் :-**

7.1 இந்தப் பதவி நிரந்தரமானது தங்களுக்கு உரித்தான ஓய்வூதிய முறை சம்பந்தமாக அரசினால் எதிர்காலத்தில் விதிக்கப்படும் கொள்கைத் தீர்மானத்துக்கு நீங்கள் கீழ்ப்படிதல் வேண்டும்.

7.2 தெரிவு செய்யபபடும் விண்ணப்பதாரிகள் அச்சந்தர்ப்பத்தில் அரச சேவையின் பதவியில் நிரந்தரமாக்கப்படவில்லை என்றால் அவர் மூன்று வருடங்கள் தகுதிகாண் அடிப்படையில் உரிய பதவிக்கு நியமிக்கப்படுவர். அரச சேவையில் உள்ள நிரந்தர மற்றும் ஓய்வூதியத்துடனான உத்தியோகத்தர் என்றால் அவருடைய பதவி ஒரு வருடம் தகுதிகாண் அடிப்படையில் அமையும்.

7.3 பதவிக்கு இணைக்கப்பட்டு 03 வருட காலத்துக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தி அடைய வேண்டுமென்பதுடன் நியமனம் கிடைத்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன் அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 மற்றும் அதனுடன் இணைந்த சுற்றறிக்கைக்கு அமைய உரிய மட்டத்தில் மொழித் தேர்ச்சியைப் பெற வேண்டும்.

7.4 தெரிவு செய்யப்படுபவர் பகல் காலத்தில் மற்றும் இரவு காலத்தில் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் ஒரு நாளில் எந்த ஒரு நேரத்திலும் சாரதிப் பதவியில் கடமைகளை மேற்கொள்ள வேண்டும். இடமாற்றத்துக்கும் உரிமை உள்ளது.

8. **விண்ணப்பிக்கும் முறை :**

8.1 இந்த அறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய A4 (செ. மீ. 21 x 30) அளவு கடதாசியில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 04 வரை உள்ள தலைப்பு முதலாவது பக்கத்திலும் மீதி அடுத்த பக்கத்திலும்

உள்ளடக்கக்கூடியவாறு தயாரிக்க வேண்டும். இந்தப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலம் நடைபெறும் என்பதால் விண்ணப்பப்படிவத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழியின் குறியீட்டு இலக்கத்தை குறிக்க வேண்டுமென்பதுடன் விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் பொழுது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் இருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அஞ்சல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slpost.gov.lk மூலம் பெற முடியும்.

8.2 சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2017.03.02 ஆந் திகதிக்கு முன் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை இலங்கை பரீட்சைத் திணைக்களம் அ.பெ.1503, கொழும்பு எனும் முகவரிக்கு பதிவு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் மூடி அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அஞ்சல் திணைக்களத்தின் ஆரம்ப கைத்தொழில் பதவித் தொகுதியின் III ஆந் தரத்தின் அஞ்சல் சாரதி பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை 2017 எனக் குறித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனமாக அமையும்.

8.3 விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சை அனுமதி பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதாவதொரு நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவரினாலோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரை கொண்டோ அவ்வாறு இல்லாத விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரசின் பாடசாலை அதிபர்/அரச சேவையின் ஓய்வூதியம் உடைய பதவிநிலை உத்தியோகத்தர்/பிரிவின் கிராம சேவை உத்தியோகத்தர்/சமாதான நீதவான்/ சத்திய ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள்/ அல்லது ரூ.240,360/- வோ அல்லது அதற்கு அதிகமான வருடாந்த சம்பளத்தைப் பெறும் அரசினதோ அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தராலோ அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதிகளோ/ பிரதம விகாராதிபதிகளோ/ அல்லது தமது சமயத் தலைவர்களோ அல்லது சமயத் தலைவர்களாக மதிக்கப்படுபவர்களாலோ அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

9. **பரீட்சையின் நிபந்தனைகள் :**

9.1 உரிய வயது இல்லாத மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவில்லாத விண்ணப்பப்படிவங்கள் முறையாக பூர்த்தி செய்யாத விண்ணப்பப்படிவங்கள், 2017.03.02 ஆந் திகதிக்குப் பின்னர் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு உள்ளடக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள், பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்படாத பூரணமற்றதாக தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் விண்ணப்பப்படிவம் கிடைத்துள்ளதாக விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படமாட்டாது.

9.2 இந்தப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரிகளாலும் பரீட்சைக் கட்டணமாக ரூ. 500/- பணம் செலுத்துதல் வேண்டும். அந்தக் கட்டணம் பரீட்சை விண்ணப்பப்படிவம் பாரம் எடுக்கும் இறுதித் திகதிக்கு முன் பரீட்சைகள் ஆணையாளருடைய வருமானத் தலைப்பு 2003-02-13 இன் கீழ் அரசின் வருமானத்துக்கு வரவு வைக்கக்கூடியவாறு நாட்டிலுள்ள எந்த ஒரு அஞ்சல்/உப அஞ்சல் அலுவலகத்திலாவது செலுத்திப் பெறப்பட்ட பரீட்சைப் பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் அகற்ற முடியாதவாறு அதில் முறையாக ஒட்டப்படுதல் வேண்டும். பரீட்சைப் பற்றுச்சீட்டு விண்ணப்பதாரியின் பெயரில் பெறப்படுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி தம்வசம் வைத்துக் கொள்வது பிரயோசனமாக அமையும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத பணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டுடன் அனுப்பும் விண்ணப்பப்படிவம் எவ்வித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படுவதுடன் எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சைகளுக்கு மாற்றவும் முடியாது.

9.3 அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வயது வரையறைக்குட்பட்ட விண்ணப்பப்படிவம் பாரம் எடுக்கும் தினத்திலோ அல்லது அந்த திகதிக்கு முன் உரிய பரீட்சைக் கட்டணப் செலுத்தி அதற்குரிய பரீட்சைப் பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்து விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளரால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு உடனடியாக அது பற்றி செய்தி பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் மூலம்

வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 நாட்களோ அல்லது 03 நாட்களுக்குள் தங்களது அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் இருந்தால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது சம்பந்தமாக இலங்கை பரீட்சை திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சை கிளையுடன் தொடர்பு கொள்ள வேண்டும். அவ்வாறு தொடர்பு கொள்ளும் பொழுது விண்ணப்பதாரிகள் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் விண்ணப்பதாரியின் முழுப் பெயர் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி தெளிவாக சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் கொழும்புக்கு வெளியில் வசிப்பவர் என்றால் அந்த விபரங்களுடன் பெக்ஸ் மூலம் பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் பிரதியை தாமதமின்றி பெறுவதற்கு ஏற்றவாறு விண்ணப்பதாரியுடைய பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்துக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் சிறந்ததாக அமையும். அவ்வாறு விசாரிக்கும் பொழுது பரீட்சை திணைக்களத்தால் விசாரிக்கும் எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தம் கை வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி பரீட்சைக் கட்டணம் செலுத்தி இருந்தால் அதற்குரிய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் அஞ்சலிடும் பொழுது பதிவு செய்து அனுப்பிய பற்றுச்சீட்டை கவனமாக வைத்துக் கொள்வது பிரயோசனமாக அமையும்.

9.4 பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்குதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படக்கூடாது.

9.5 பரீட்சை நடைபெறுவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் சட்டத்திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ் படிதல் வேண்டும். அந்த சட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளரால் விதிக்கப்படும் சகல தண்டனைக்கும் ஆளாக வேண்டும்.

9.6 *பரீட்சைப் பெறுபேறுகள்.*- எழுத்து மூலப் பரீட்சையின் புள்ளிகளின் நூற்றுக்கு 40% க்கு குறையாமல் பெறுபவர்களுடைய புள்ளிகளின் திறமைக்கேற்ற ஒழுங்கமைப்பின் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு அறிவித்தலின் 6.2 பந்திக்கு அமைய செயல்முறைப் பரீட்சைக்கு அனுப்பப்படும் எழுத்துமூலம் மற்றும் செயல்முறைப் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமைக்கமைய தயாரிக்கப்பட்ட பெறுபேறுகளின் ஆவணம் அஞ்சல் அதிபதிக்கு வழங்கப்படும். பின்னர் எழுத்துமூலப் பரீட்சைக்கு தோற்றும் சகல பரீட்சார்த்திகளுடைய பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் அஞ்சல் மூலமோ அல்லது பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இல் பகிரங்கப்படுத்தப்படும்.

10. **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

10.1 பரீட்சைக்குத் தோற்றும் நாள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

10.2 பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்திகள் மண்டப மேற்பார்வையாளருக்கு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்காக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையோ அல்லது செல்லுப்படியாகும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச் சீட்டு போன்ற ஆவணங்களை மட்டும் அதில் ஏதாவதொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

11. **போலியான தகவல்கள் வழங்குதல்**.- விண்ணப்பதாரியினால் அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் போலியானதாகவோ பிழையானது என்றோ இணைக்கப்படுவதற்கு முன் தெரியவரும் பட்சத்தில் தங்களுடைய பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படும் அவ்வாறே உண்மைக்குப் புறம்பானதாகவோ பிழையான தகவல்களோ வழங்கியுள்ளதாக இணைத்துக் கொண்டதன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் அதற்குரிய ஒழுங்கு முறைக்கமைய சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலத்தில் ஏற்படும் இந்தச் சுற்றறிக்கையின் மொழிகளுக்கிடையில் ஏதும் பொருத்தமற்றதோ அல்லது ஒன்றுக்கொன்று முரணாகவோ இருந்தால் அச்சந்தர்ப்பத்தில் சிங்களம் மொழிமூலத்தின் அறிவுறுத்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

13. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத வேறு ஏதாவது விடயம் என்றாலோ அதில் அஞ்சல் அதிபதியின் விருப்பத்துக்கு அமையவே தீர்மானிக்கப்படும்.

அஞ்சல் அதிபதி,
அஞ்சல் திணைக்களம்.

இல. 310, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2017, பெப்புருவரி 03.

(அலுவலக உபயோகத்திற்காக)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அஞ்சல் திணைக்களத்தின் தொழில் வகையின் ஆரம்ப மட்ட திறமையின் III ஆந் தரத்தின் அஞ்சல் சாரதி பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

Open Competitive Examination For Recruitment to the Post of Postal Service Driver Grade III in the Employee Category of Primary Level Skilled of the Department of Posts – 2017.

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 02
தமிழ் - 03
(உரிய இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

| பரீட்சைக்கு தோற்றும் நகரம் | | நகர இலக்கம் |
|---|---|---|
| முதல் தெரிவு | | |
| இரண்டாம் தெரிவு | | |

1. i. இறுதியில் வரும் பெயர் முதலில் முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-

........................................................................................................

உதா :- GUNAWARDHANA M.G.B.S.K.

ii. முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-

........................................................................................................

........................................................................................................

சிங்களத்தில் / தமிழில் :-

........................................................................................................

........................................................................................................

2. i. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-

........................................................................................................

........................................................................................................

(பரீட்சை அனுமதிபத்திரம் இந்த முகவரிக்கு அனுப்பப்படும்)

சிங்களத்தில் / தமிழில் :-

........................................................................................................

........................................................................................................

3. i. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- | | | | | | | | | | |

ii. பிறந்த திகதி :

வருடம் :- ☐☐☐☐ மாதம் :- ☐☐ திகதி:-- ☐☐

iii. 2017.03.02 ஆந் திகதியில் வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

5. நீங்கள் இலங்கைப் பிரஜையா ?

ஆம் ☐ இல்லை ☐

(பொருத்தமான இடத்தில் X புள்ளடி அடையாளத்தை இடவும்)

6. கல்வித் தகைமை :-

6.1 க.பொ.த. (சா.தரம்) முதல் முறை :

வருடம் ..................... சுட்டிலக்கம் ........................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

6.2 க.பொ.த. (சா.தரம்) இரண்டாம் முறை :

வருடம் ..................... சுட்டிலக்கம் ........................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

7. உடற் தகுதி :-

விண்ணப்பதாரியின் உயரம் :- அடி .................. அங்குலம் ............. (செ.மீ.................)

8. தொழிற் தகைமை :-

(i) சாரதி அனுமதி பத்திர இலக்கம் :-
(ii) தொகுதி :-

(iii) வழங்கப்பட்ட திகதி :-
(iv) D வகுப்பில் (பார வாகன) சாரதி அனுமதி பத்திரம் பெறப்பட்ட திகதி :-

9. வேறு தகைமைகள் :-
.......................................................................................................................
.......................................................................................................................
.......................................................................................................................
.......................................................................................................................

10. நீங்கள் எப்பொழுதாவதோ அல்லது எங்கேயாவதோ தவறுக்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாக ஆஜராகினீர்களா?

ஆம் ☐ இல்லை ☐

(உரிய கூட்டில் x அடையாளத்தை இடவும்)

ஆம் எனின் அது பற்றிய விபரங்களை குறிப்பிடவும்
.......................................................................................................................
.......................................................................................................................

11. பரீட்சைக் கட்டணம் செலுத்திய அஞ்சல்/உப அஞ்சல் அலுவலகம் :- ........................................

(i) பரீட்சை பற்றுச்சீட்டு இலக்கம் :- .................................
(ii) பற்றுச்சீட்டு வழங்கிய திகதி :- ......................................

| |
|---|
| பரீட்சைப் பற்றுச்சீட்டை அகற்ற முடியாதவாறு இதில் ஒட்டவும் பற்றுச்சீட்டின் பிரதியை தம் வசம் வைத்துக் கொள்வது பிரயோசனமாக அமையும்<br>(பற்றுச்சீட்டு) |

12. விண்ணப்பதாரியின் உறுதியுரை :-

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் எனக் குறிப்பிடுகிறேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது விடயம் உண்மைக்குப் புறம்பானதாகவோ பிழையானது என்றோ தெரிவு செய்வதற்கு முன் தெரியவரும் பட்சத்தில் நான் தகைமையற்றவன் ஆவேன் எனவும் நியமனம் கிடைத்த பின்னர் பிழையான தகவல்களை வழங்கியுள்ளேன் எனத் தெரியவரும் பட்சத்தில் நஷ்டஈடு இல்லாமல் உடனடியாக நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் நன்கு அறிவேன்.

மேலும் பரீட்சை நடைபெறுவது சம்பந்தமாக மற்றும் பெறுபேறு வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்படும் சட்டத்திட்டங்களுக்கு நான் கீழ் படிவேன் எனவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை பின்னர் மாற்ற மாட்டேன் எனவும் வெளிப்படுத்துகிறேன்.

........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி .......................

13. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

இந்த விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் திரு. ..................................................................... அவர்கள் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் அவர் எனது முன்னிலையில் ................. ஆந் திகதி அவருடைய கையொப்பத்தை இட்டார் எனவும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அந்தப் பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

..................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தியவரின் பெயர் :.........................................................................
பதவி :.......................................................................................................................
முகவரி :.......................................................................................................................
உத்தியோகபூர்வ முத்திரை :..........................................................................................
திகதி :........................

*14. நிறுவனத் தலைவரின் / திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்காக)*

*இவ்விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் திரு. ........................................................................... அவர்கள் இந்த அமைச்சின்/திணைக்களத்தின்/கூட்டுத்தாபனத்தின்/நிறுவனத்தின் .............................. ஆந் திகதி தொடக்கம் ..................................................... பதவியில் சேவையாற்றுபவர் எனவும் இந்தப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் அவர் தற்பொழுது வசிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது. அவர் இதுவரை எவ்வித ஒழுக்காற்று தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை எனவும் மேற்படி தகவல்கள் உண்மையானது எனவும் உறுதிப்படுத்துகிறேன்.*

........................................................,
*திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.*

*திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவரின் பெயர் :............................................................*
*பதவி :........................................................................................................................*
*முகவரி :.....................................................................................................................*
*உத்தியோகபூர்வ முத்திரை :..........................................................................................*
*திகதி :.......................*

*2-212*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
***2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

*1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.*

*2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்* **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

*3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.*

*4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.*

**5. சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.*

**6. நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** *பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

**7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

*8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.*

*10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-*

| | ரூபா ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 13700 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 13700 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,30000 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,60000 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

*11.* **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** *வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

**12. ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

**13. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

***14. 2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-***

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | ரூபா ச. விலை ரூபா ச. | ரூபா ச. தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை-2017**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 03.02.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.01.2017 |
| | | வியாழன் | 09.02.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.01.2017 |
| | | வெள்ளி | 17.02.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.02.2017 |
| | | வியாழன் | 23.02.2017 | .. | நண்பகல் 12 | வியாழன் | 09.02.2017 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 03.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.02.2017 |
| | | வெள்ளி | 10.03.2017 | .. | நண்பகல் 12 | வியாழன் | 23.02.2017 |
| | | வெள்ளி | 17.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.03.2017 |
| | | வெள்ளி | 24.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.03.2017 |
| | | வெள்ளி | 31.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.03.2017 |
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 07.04.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.03.2017 |
| | | புதன் | 12.04.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.03.2017 |
| | | வெள்ளி | 21.04.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.04.2017 |
| | | வெள்ளி | 28.04.2017 | .. | நண்பகல் 12 | புதன் | 12.04.2017 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.